# திராவிடநாடு

29—12—57 | வார வெளியீடு | விலை 16 காசு


## நீதியோ!

*******

இச்சைக் கினிய திராவிடம்-எங்கள்
இன்பத் தமிழின் உயர்விடம்-இங்கே
நச்சு மனத்தவர் ஆளவோ-நாங்கள்
நாணிக் கைகட்டிப் பிழைக்கவோ?

இன்புற் றிருந்த திராவிடம்-தனில்
எத்தர்கள் ஆட்சி நிலைப்பதோ-இதை
இன்னும் பொறுத்திட லாகுமோ-கெட்ட
ஈனர்க் கடிதொழ லாகுமோ?

அறம் பொருளின்பம் சொன்னவர்-புவி
ஆளும் வழிமுறை சொன்னவர்-ஒரு
திறனிலாதவர் சூழ்ச்சியில்-சிக்கிச்
சீரற்றழிவது நீதியோ?

சின்ன உயிரினைக் காக்கவே-புகழ்
செந்தமிழ் வீரத்தை விற்றிடும்-சில
பின்ன மதியினர் ஆட்சியில்-பிணக்
காடு பெருகுதல் காணுமின்!

ஓட்டென்று நம்மிடம் வேண்டினோர்-தமிழ்
நாட்டிடை நஞ்சைப் புகுத்தினர்-அவர்
கூட்டம் உடைந்திடச் செய்குவீர்-தமிழ்க்
குலம் உயர்ந்திடச் செய்குவீர்!

அன்பின் வழிமுறை கண்டவர்-மிகத்
துன்புற் றழிவது நீதியோ-நாம்
ஒன்றெனக் கூடி உயருவோம்-தமிழ்
ஓங்க திராவிடம் வாங்குவோம்!

—புலவர் கூ. ஆறுமுகம்.

# போர் முழக்கம்

[மா. கி. தசரதன்]

—பீடிநி—

சென்ற கிழமை ஞாயிறு (22—12—57) அன்று மாலை சென்னை கோகலே மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூடியிருந்த மக்கள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல, ஒரே பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்ல, ஒரே வகையான வாழ்க்கைத் துறையைச் சேர்ந்தவர்களும் அல்ல. பல்வேறு வகையான கொள்கை கொண்டவர்கள், வாழ்க்கை முறைகள் சமுதாய நிலை ஆகியவற்றில் வேருக இருப்பவர்கள் அவர்கள். அந்தக் கூட்டத்தில் பேசுவதற்காக மேடை மீது அமர்ந்திருந்தவர்களில் ஒரே கட்சியினரோ, ஒரே கொள்கையின் ஒரே துறையில் இருப்பவரோ இல்லை.

காங்கிரஸ்காரர் இருந்தார்,

காங்கிரசை சீர்திருத்த விரும்பியவர் இருந்தார்,

கட்சிக்குள் நான் சிக்கவில்லை என்று கருதியவர் இருந்தார்,

பெங்களூர்க்காரர் ஒருவர் இருந்தார்,

முன்னாள் பேராசிரியர் இருந்தார்,

இன்னாள் கல்லூரித் தலைவர் இருந்தார்,

நமது இயக்கத்தவர் இருந்தனர்.

இவர்கள் எல்லோரும் அந்தக் கூட்டத்தில் பேசினார்கள். இவர்கள் பேசியதனையெல்லாம்கேட்டுக் கொண்டு கருத்தோடு கவனஞ் செலுத்திக்கொண்டு பலர் இருந்தனர்.

இத்தனை வேறுவேறு கோணங்களில் நிற்கின்ற நிலையைப் பெற்ற அவர்கள் பேசியபோது குரல்கள் வேறுவேறு ஒலியைத்தான் எழுப்பின; பேச்சு முறை வேறுவேறு வகையில்தான் இருந்தது.

ஆனால் எல்லோரும் ஒரே கருத்தையே கூறினர்; ஒரே முடிவையே நாடி நின்றனர்.

ஒரே கருத்தை, ஒரே முடிவை-- ஒருவர் சொன்ன பின் மற்றவர் என்று திரும்பத் திரும்பச் சொன்னாலும் கூடியிருந்தோர் கொஞ்சமும் ஆர்வம் குன்றாமல் கேட்டுக் கொண்டிருந்தனர். ஆர்வம் சில நேரங்களில் அச்சமாக மாறியது; சில நேரங்களில் ஆற்றலாகத் திரண்டது. ஆர்வமும் ஆவலும் அந்தக் கூட்டத்தினரிடை கடைசிவரை குடிகொண்டிருந்தது.

அப்படி எதைப்பற்றி அவர்கள் அத்தனை பேரும் அங்கே சொற்பெருக்காற்றினர்?

**இந்தியை எதிர்த்துப் போராட்டம்.**

ஆமாம். இந்தித் திணிப்பை எதிர்த்து இத்தனை பேர் குரல் எழுப்பினர்.

**ச. இராசகோபாலாச்சாரியார்**

**டாக்டர் சி. பி. இராமசாமி (ஐயர்)**

**கோதண்டராவ்**

**பேராசிரியர் ம. கி. சண்முகம்**

**பேராசிரியர் இரத்தினசாமி**

**வி. கே. இராமசாமி (முதலியார்)**

**நாவலர் நெடுஞ்செழியன்**

**செல்லசாமி**

இத்தனை பேரும் இந்தியை எதிர்த்துப் போர்ப் பரணி பாடினர். எதிர்ப்பு விழாவுக்குக் கொடி ஏற்றினர்; கோலோச்சுபவர்களுக்குத் தங்கள் கொள்கையை, மக்கள் மன்றத்தின் மனக் கருத்தினை எடுத்து சொல்லிய காட்சி அருங் காட்சியாக இருந்தது.

**சர்மிஸ்ரா இஸ்மெயில்** மேடையில் அமர்ந்தபடி இதனையெல்லாம் பாராட்டிக்கொண்டிருந்தார்.

இந்தி எந்தெந்த வகையில் அரசியல் அலுவலக மொழியாகக் கூடாது என்பதைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் நின்று வாதிட்டுத் தங்கள் கருத்தை நிலை நாட்டினர். பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் "இந்தியை ஏன் எதிர்க்கின்றோம் என்பதற்கு, காரணங்களைக் காட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை—இந்த மேடையின் மீது இருப்பவர்களை ஒரு நிழற்படம் எடுத்து அனுப்பினால் போதும்—அந்தப் படம் பேசும் ஆற்றல் பெறுமானால் என்னென்ன சொல்லும்? ஆனால் அது செல்லிடுவதனையெல்லாம் கேட்டு நடக்கும் நெறி டெல்லி சர்க்காருக்கு வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள்.

உண்மை — அந்த நிழற்படம் பேச்சாற்றல் பெறுமானால் பண்டிதரின் கைக்குச் சென்றவுடன் அது "பண்டிதரே கேளுங்கள்! தென்னாட்டில் யாரோ சிலர்—ஒரு கும்பல்--இந்தியை எதிர்ப்பதாகக் கூறிடுகின்றீர்களே, இதோ என்னைப் பாருங்கள், இதற்குள்ளே, எத்தனை பேரை நான் தாங்கி வந்திருக்கின்றேன். இவர்கள் ஒரு கட்சியினர் அல்ல, உங்களுக்கு வேண்டியவர்களும் இருக்கின்றனர், மெத்தப் படித்து மேனமைக் கலைகள் கற்றவர் என்று உங்களாலேயே போற்றப்படுபவர் இருக்கின்றார்—இத்தனை பேரும் தனித் தனியாக வேறு வேறு இடங்களில் நின்று வீறுபெறப் பேசிடும் நிலையில் இருப்பவர்கள்—இதோ இங்கே என்னைப் பாருங்கள்—எல்லோரும் ஒன்றாக, ஒரு குடும்பத்தினர்போல்ஒரே குறிவைத்துப் பல இடங்களில் நின்று ஒற்றை விலங்கு வேட்டையாடிடும் வீரர்கள்போல் இருக்கின்றனர்—இன்னுமா இந்தி—என்று ஏதேதோ பேசிடும்.

பேராசிரியர் சண்முகம், (தலைவர் சர் தியாகராயர் கல்லூரி,) அவர்கள், கல்லூரிக்குள் இந்தியின் நிலையை எடுத்து விளக்கி ஆங்கிலம் இந்தியாவின் மொழி

(4-ம் பக்கம் பார்க்க)

★ 1937-1957 ★

16] ஆண்டு சந்தா ரூ. 8 [29-12-57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 24

"எங்கள் கட்சி பதவிக்கு வந்து, நானும் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், எனது முதல் வேலை, தமிழ் நாட்டில் இந்தி மொழியைக் கட்டாயமாக்குவதுதான்" என்று, அன்று 1937-ல் காங்கிரஸ் தேர்தல் பிரசாரம் நடாத்தியபோது அன்பர் ஆச்சாரியார் முழக்கம் எழுப்பியதை நாம் மட்டுமல்ல, எவருமே மறந்துவிட முடியாது.

ஏனென்றால், ஆச்சாரியாரின் முழக்கம் வெற்றி பெற்று அவரே முதலமைச்சருமாகி இந்தி மொழி கட்டாய பாடமாக்கப்பட்டது. அதன் விளைவாக 1500-க்கு மேற்பட்ட தமிழ் மக்கள், ஆண்களும் பெண்களுமாகச் சிறை புகுந்தனர்.

ஆச்சாரியார் தாலமுத்துவின் உயிரைக் குடித்து, நடராசனின் பிணத்தின் மீது நடந்து இந்தி மாதாவுக்கு வரவேற்பு நடாத்திப் பவனி வந்தார்.

"என்ன இது!! நான் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லையே! புற்றில் இருந்து ஈசல் கிளம்புவதுபோலல்லவா இருக்கிறது, இந்த இந்தி எதிர்ப்புப் படை கிளம்புவது" என்று ஏளனமும் ஏக்கமும் கலந்த குரலில் பேசி, "என்றாலும் எனது திட்டத்தைக் கைவிடேன் — எத்துணை படை வந்தாலும் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு சிறைக்கூடத்தைப் பெரிதாக்கி வைத்திருக்கிறேன்" என்று எக்காளமிட்டவர்.

இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்குவதற்கு எத்தனையோ குட்டிக் கதைகளைக் கூறி இந்தி மொழியின்பாலுள்ள குறைகளைமறைக்க முயன்றவர்.

இந்தி மொழிக்கன்றி வேறெந்த மொழிக்கும் இந்நாட்டின் பொது மொழியாகும் வாய்ப்பும் தகுதியும் இல்லை என்று வாதம் புரிந்தவர்.

இந்தி சமஸ்கிருதத்தின் மூதற் பிள்ளை; எனவே அது ஒன்றுதான் இந்நாட்டின் பொது மொழியாக அமைய அருகதையுடையது என்று ஆர்ப்பரித்தவர்.

"என்னுடைய பதவி காலத்தில் நான் செய்யக்கூடியது ஏதாவது இருந்தால், அது, இந்தியைக் கட்டாய பாடமாக்குவது ஒன்றுதான்" என்று உரத்த குரலில் பேசியவர்.

ஆனால், இன்று..........!

அன்று நாம் எந்தெந்தக் காரணங்களைக் காட்டிக், கட்டாய இந்தி கூடாதென்று கூறினோமோ, அவற்றைவிடப் பன்மடங்கு அதிகமான காரணங்களை என்னால் கூறமுடியுமென்று, அடுக்கடுக்காக ஆதாரங்களை எடுத்து வைத்துக்கொண்டு இந்தி எதிர்ப்புப் போர் முரசம் கொட்டுகிறார்.

இந்தி மொழி என்பது ஒரு நாட்டின் மொழி அல்ல, அது பட்டாளமொழியென்று ஆதாரம் காட்டி அன்று நாம் கூறினோம், ஏற்க மறுத்தார் ஆச்சாரியார்.

ஆனால், இன்று அவரே ஒப்புக்கொள்கிறார் அது ஒரு பட்டாள மொழிதான் என்பதை.

அன்று நாம் கூறினோம், இந்தி ஒருவகையான மொழி அல்ல, அது பதினைந்து வகையாகப் பிரிக்கப்பட்டு, ஒருவகையினர் பேசுவது இன்னொரு வகையினருக்குப் புரியாத கதம்ப மொழி என்பதாக. ஒப்புக்கொள்ள மறுத்தார் ஆச்சாரியார்.

ஆனால், இன்று அவரே கூறுகிறார், இந்தி மொழியில் பதினைந்து விதம் உண்டு அவற்றுள் "மைதிலி" என்ற பெயரோடு பேசப்படும் இந்தியையே இப்போது பொதுமொழியாக்கப் பார்க்கிறார்கள் என்பதாக.

அன்று நாம் கூறினோம், இந்தி வளம் பெறாத மொழி, இலக்கண வளமில்லாத மொழி என்பதாக, ஏளனம் செய்தார் ஆச்சாரியார்.

ஆனால், இன்று அவரே கூறுகிறார், இந்தி மொழிக்கு எந்தவிதமான வளமும் கிடையாது; இந்தியை மற்றவர்கள் படிப்பது ஒருபுறம் இருக்கட்டும், முதலில் இந்தியைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப் படிக்கவைத்து வளமாக்கவேண்டும் என்பதாக.

அன்று 1937-ல் நாம் எந்தெந்தக்காரணங்களைக் காட்டி இந்தி வேண்டாமென்று கூறினோமோ,

அவற்றையெல்லாம், இன்று 1957-ல் ஆச்சாரியார் எடுத்துக் கூறி இந்நாட்டின் பொது மொழியாகும் தகுதி இந்திக்கு எள்ளளவும் கிடையாது என்று கூறுகிறார்.

இருபதாண்டுகளுக்கு முன் நாம் கூறியதை இப்போது ஆச்சாரியார் கூறுகிறாரே, இதில் என்ன புதுமை இருக்கிறது என்று, நாமும் அவர்களைப்போல ஏளனமாகப் பேசவில்லை— அப்படிப் பேசுவது தமிழர் பண்புமல்ல.

அன்று தெரியவில்லை—இன்று புரிகிறது —அவ்வளவுதான். காலம் கடந்து அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள், காரணமற்று ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களைச் சிறையில் அடைத்தார்கள், இருவரைப் பலிகொண்டு பழி வாங்கினார்கள் என்ற இன்ன பிறவற்றிற்காக அவர்கள்மீது சினம் கொள்வது சீரிய செயலாகாது.

அன்றில்லாவிட்டாலும் இன்றாவது உண்மையை ஒப்புக்கொண்டார்களே என்பதில் நமக்கு மகிழ்ச்சியே ஏற்படுகின்றது.

ஆச்சாரியாரும் அவரது சரியொத்த நெருங்கிய நண்பர்களுமான டாக்டர் சி. பி; பேராசிரியர்கள் இரத்தினசாமி, சண்முகனார், செல்லசாமி, கோதண்டராவ், நமது முதுபெரும் தலைவர் பி. டி. ஆர். ஆகியவர்கள் இந்த இந்தி மொழி விஷயத்தில் கவனம் செலுத்திப் போர் முரசு கொட்டியிருப்பது, தற்போது நாம் ஈடுபட்டிருக்கும் வேறு பல்வேறு இயக்கப் பணிகளின் காரணமாக நமக்குச் சிறிது ஓய்வு தந்து, நீங்கள் அந்த வேலைகளைக் கவனியுங்கள் இந்தப் பணியை நாமே பார்த்துக்கொள்வதாக வாக்களிப்போல் இருக்கிறது அவர்களது போர் முழக்கம்.

அவர்களது போர் முழக்கம் குறித்த விளக்கத்தை இதழின் வேறு பக்கங்களில் காணலாம்.

★

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

யாகிவிட்டதை எடுத்துக் காட்டினார்.

நாவலர் அவர்கள் நமது இயக்கத்தின் கொள்கை வழி நின்று இங்கு இந்திக்கு இடமில்லை என்பதனை விளக்கியதோடு, தென்னாட்டு மொழிகளுக்குள் தோன்றிடும் ஒற்றுமையை எடுத்துவிளக்கி இவற்றிற்கு இந்தி வேற்றுமொழி தான் என்பதனை நிறுவினார். பின்னர் ஆங்கிலம் அந்நியர் மொழி எனின் திராவிடர்க்கு இந்தியும் அந்நிய மொழியே என்பதனை ஆதாரங்களுடன் அழகுறஎடுத்து மொழிந்து இந்தியை எதிர்ப்பதின இன்றியமையாமையை எடுத்துக் காட்டினார்.

பெங்களூரிலிருந்தும் இந்தப் பேரவையின் கூட்டத்திற்கு வந்திருந்த கோதண்டராவ் அவர்கள் இந்தியை எதிர்த்துப் போர் முழக்கம் செய்தபின் போர்க்களத்தில் வீரர்கள் 'வெற்றி நமதே' என முழங்கிடுவதுபோல் "இந்தி என்றுமில்லை; ஆங்கிலம் என்றும் இருக்கும்" (Hindi never; English ever) என்று வீரமுழக்கம் செய்திட்டார்.

கூட்டத்திற்குத் தலைமை ஏற்ற ச. இராசகோபாலாச்சாரியார் இந்தித் திணிப்பை வன்மையாகக் கண்டித்தார். சென்னை அரசினர் துணிவுகொண்டு இந்தி எதிர்ப்பில் ஈடுபடவேண்டுமென கேட்டுக் கொண்டார். காங்கிரஸ் கட்சியினரைப் பார்த்து 'கட்சிக் கட்டுப்பாடு என்ன செய்துவிடுமோ என்று நடுங்கிடவேண்டாம். நாட்டுக்குத் தேவையானது இது என்பதனை உணர்ந்து உழைக்க வாரீர்' என்று வேண்டுகோள் விடுத்தார்.

**தீர்மானம் காகிதத்தில் இருந்தால் போதாது — நம்முடைய மனத்தில் இருக்கவேண்டும். சும்மா தீர்மானம் போட்டுவிட்டுப் போனால் ஒன்றும் நடந்து விடாது. ஒன்று திரண்டு போராடினால் தான் தென்னாட்டின்மீது இந்தியைத் திணிக்கும் நோக்கத்தை வடநாட்டினர் கைவிடுவர்,**

என்று, அவர் முழங்கியபோது நான் மேடையின்மீது பார்த்தேன்; மண்டபத்தின் சுவர்களை எல்லாம் பார்த்தேன் — தெற்கு வடக்கு என்றுபேசிடுகின்றாரே, ஒருவேளை நமது கழகக் கூட்டம்தானோ என்று எண்ணி இரு வண்ணக் கொடி ஆடிப் பறந்திடுகின்றதோ என நினைத்து எங்கும் பார்வையைச் செலுத்தினேன். இருவண்ணக் கொடி காணோம். அந்தக் கொடியின் காவலர்—நாவலர்— மட்டுமே இருந்தார். ஆனால் ஆச்சாரியார் வடக்கு தெற்கு 'பேதம் பேசியது' மட்டுமில்லாமல், போராடவேண்டும் வாருங்கள் என அழைப்பிதழ் கொடுத்துக் கொண்டிருந்தார்.

என்ன விந்தை! உண்மை எவ்வளவு உறுதியானது என்று வியந்தேன். நாவலர் முகத்தில் புன்னகை தவழ அந்த மன்றிடை காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

இந்த அரிய காட்சியைக் கண்டு களித்த நான் இந்த மகிழ்ச்சியைப் பங்கிட்டுக்கொள்ள யாராவது தெரிந்தவர்கள் இருக்கின்றார்களா என்று பார்க்கத் திரும்பினேன். என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த 'தேசிய' ஏட்டின் நிருபர் வேக வேகமாக சுருக்கெழுத்து எழுதியவாறே "என்ன பார்க்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை. இவர் ஏதோ தீர்மானம் காகிதத்தில் இருந்தால் போதாது; மனத்தில் இருக்க வேண்டும் என்கிறாரே, என்ன தீர்மானம் அது? இன்னும் இங்கே

(13-ம் பக்கம் பார்க்க)

---

## பிறப்பு

தர்மபுரி தி. மு. க. தோழர் இராசனுக்கு 19—12—57-ல் ஒரு ஆண் குழந்தை பிறந்து "பூஞ்சோலை" என்று பெயர் சூட்டப்பட்டதன் நினைவாகத் திராவிட நாடு வளர்ச்சிக்கு இரண்டு ரூபா அன்பளிப்புத் தரப்பட்டது.

# வீர வல்லபன்!

இராசராச சோழன் தென்னகத்தில் ஆண்டுகொண்டிருந்த காலம் அது. அக்காலத்தில் கீழைச் சாளுக்கிய நாடானது பெருங் குழப்பத்தில் அல்லற்பட்டிருந்தது. அந்நாட்டு அரச மரபினருள் இரண்டு கிளையினர் தோன்றி ஒருவரையொருவர் நாட்டைவிட்டு விரட்ட முன் வந்தனர். அதனால் நாடு கலகத்திற்கு உட்பட்டது. சக்தி வர்மன் என்பவன் ஒரு கட்சியினன். அவனை மற்றொரு கட்சியினர் நாட்டை விட்டே விரட்டினர். சக்தி வர்மன் இராசராசனைச் சரணடைந்தான். ஏறத்தாழக் கி. பி. 999-ம் ஆண்டில் இராசராசன் வேங்கி நாட்டின் மீது படையெடுத்துக் கைப்பற்றி சக்திவர்மனை அதற்கு அரசனாக்கினான்-

இராசராசன் வேங்கி நாட்டிற்கு படையெடுக்கச் சின்னாட்களுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சிகளே நாடகமாகியுள்ளன. நிகழ்ச்சிகள் கற்பனையே!

## காட்சி 1

இடம்:- ஒரு மாளிகை.

இருப்போர்:- சேனாதிபதி குரவனின் ஒன்றுவிட்ட சகோதரனான வல்லபன். அவன் தோழன் மாராயன்.

[வல்லபன் இங்குமங்கும் உலவியபடியே இருக்கிறான். மாராயன் முகத்திலே சிந்தனை ரேகைகள் படிந்து கிடக்கின்றன. சிந்தனைக் கடலிலே மூழ்கியபடி இங்குமங்குமாக உலவியபடி இருக்கிறான் வல்லபன்.]

வல்லபன்:- மாரா! என் உள்ளமென்னமோ ஊசலாடுகிறது. மனம் ஓர் நிலையிலில்லை. மனதைக் கட்டுப்படுத்த எவ்வளவோ முயன்றும் பயனில்லை. என் உள்ளத்திலே களளமற்றுக் குடியேறிவிட்ட அந்தத் திருவுருவத்தை அழித்தொழிக்க முடியவில்லை. எங்கு திரும்பினாலும் அவள் எழிலுருவம். எதைக்கண்டாலும் அந்த வட்ட நிலா முகத்தழகி வந்து நிற்கிறாள். கண் திறந்திருந்தால்தான் அந்தக் கட்டழகி வந்து வெட்டிப் பறிக்கிறாளே

**மதனகோபால்**

என்று கண்ணை மூடினால் அதைவிட வேதனையாக இருக்கிறது. கண்களை மூடியதும் அந்தப் பொன் மேனியாள் புன்னகையுடன் நோக்குவதைத்தான் உணர முடிகிறது. விழித்தாலும் வேதனை, விழி மூடினாலும் வேதனை. படுக்கையில் சென்று படுத்தால் பாவையில்லையே என்ற எண்ணமே தோன்றுகிறது. ஏக்கத்தின் தேக்கமாகச் சோகத்தின் சின்னமாக மாற வேண்டுமா நான்? குழப்பக்கடலில் வீழ்ந்து தத்தளிக்கிறேன். இதற்கோர் முடிவில்லையா? எனக்கு வளமான வாழ்வே இல்லையா?

மாராயன்:- வல்லபா! நீ சொல்வது எனக்கொன்றும் விளங்கவில்லையே. உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அக்கிள்ளைமொழியாள் யார்? வீராதி வீரனான, இராசேந்திரச் சோழ மன்னனின் அருமை நண்பர்களில் ஒருவனான வல்லபதேவனின் மனதைக் கவர்ந்த வாலைக் குமரியார்? சொல் வல்லபா சொல்! உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த வடிவழகியிடம் சென்று இப்பொழுதே சொல்லி அழைத்து வருகிறேன். உன் அருமை நண்பன், இந்த ஏழை மாராயன் இருக்கும்வரை உனக்கெதற்கு வீண் சஞ்சலம். விவரமாகக் கூறு வல்லபா. வழி முறைகளைக் காணலாம்.

வல்ல:- மாரா! உன் உள்ளம் எனக்குத் தெரியும. நான் உலகத்தில் நம்பி வரும் நல்லவர்களில் முதன்மையானவன் அல்லவா நீ! எனக்காக உன் உயிரைக் கூட மதியாமல் தியாகம் செய்ய முனையும் தோழனல்லவா? நட்பிற்கோர் நாயகமே! அன்புத் தோழனே! எந்த விஷயமானாலும் நீ செய்து முடித்து விடுவாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இந்த விஷயம்... வேண்டாம் மாரா வேண்டாம். உன்னால் இது முடியாது. என்னோடுதான் இது மக்கி மடியவேண்டும். நடக்கக்கூடாத காரியம். ஆனால் இந்த வல்லபன் மனம் அதில்தானே சென்று இலயிக்கிறது. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதாகச் சொல்வார்கள், அதைவிட மோசமாகிவிட்டது இந்த வல்லபனின் வாழ்க்கை. என்ன செய்வது? மனதைக் கட்டுபபடுதத முடிகிறதா? அல்லது கட்டுப்படுத்தினால்தான் அது கேட்

கிறதா? இல்லையே! பின்னுல் துயரத்தில் தள்ளுகிறது, சோகத்தில் ஆழ்த்துகிறது.

மாரா :- விஷயமென்ன வல்லபா? விவரமாகக் கூறு. விஷயத்தைக் கூருமல் நீயே எல்லாவற்றையும் தீர்மானித்துக்கொண்டால் என்ன செய்வது. எந்தக் காரியத்தையும் செய்து பார்க்கு முன்னர் முடியாது என்று கூறி விடுவது அறிவுடைமையல்ல. முயற்சித்தால் முடியாதது என்ன இருக்கிறது? அதனுல் அப்படிச் சொல்லாதே. முயற்சித்துப் பார்க்கலாம். சொல் தோழா. சொல்.

வல்ல :- மாரா! சொல்லச் சொல் கிருயா? இரு சொல்கிறேன்.

[சிறிதுநேரம் மௌனமாக இருக்கிறன் வல்லபன். அவன் அகத்தில் நடக்கும் போராட்டங்கள் முகத்தில் நன்கு தெரிகின்றன. பின் பேசத் தொடங்குகிறன்.]

மாரா! இன்று உன்னிடம் என் உள்ளப்போராட்டத்தைத்தெள்ளத் தெளிய எள்ளளவும் விடாமல் உரைக்கிறேன். எப்படி என்மேல் இராசேந்திர சோழ இளவரசர் அன்புகொண்டு அருமைத் தோழனுகக் கருதி வருகிருரோ, அப்படித்தானே நீயும் என்னைக் கருதுகிருய். எப்படி இதுவரை இராசேந்திரனுக்கும் எனக்கும் ஒளிவு மறைவு இருந்ததில்லையோ, அப்படியேதான் நம்மிருவரிடமும் இருக்கிறது. ஆனுல் இந்த விஷயம்கூட உன்னைப்போலவே இராசேந்திர இளவரசருக்கும் தெரியாது. அவருக்கும், எனக்கும் இரகசியம் எதுவும் இருந்ததில்லை. ஆனுலும் அவருக்கு நான் இதைப் பற்றித் தெரிவித்தேனில்லை. என்னிடம் காணப்பட்டிருந்த மாறுதலைக் கவனித்துவிட்டு அவர் காரணம் கேட்டும் நான் சொல்லவில்லை. அவரிடம் சொல்லக்கூடிய விஷயமா? இல்லை. ஒருக்காலும் இல்லை. ஆனுல் அருமைத் தோழா, மாரா, நீ கேட்கிருய். அதற்கு உதவியும் செய்கிறேன்என்கிருய். நீ உதவி செய்தாலும் செய்யாவிட்டாலும் சரி, உன்னிடம் நான் சொல்லிவிடுகிறேன், கேள்.

ஒரு நாள் மாலை. நான் குதிரைமீது ஏறிச் சுற்றிவந்து கொண்டிருந்தேன். அப்போது கண்டேன் ஓர் காட்சியை. அதன் மாட்சியை என்னவென்று விளக்குவேன்.

மொட்டு விரிக்காத பட்டு ரோஜாவைக் கண்டால் கண்பட்டுக் கருகிவிடுமோ என்று எண்ணத் தகும் பொன்மேனியாள். வார்த்தெடுத்த வண்ணச்சிலை போன்ருள், அழகு இராணியாக, எழிலோவியமாகத் திகழ்ந்தாள். இத்தகைய அழகுருவம்கூட அகிலத்தில் உண்டா என்ற ஐயம் எனக்கேற்பட்டது. நாம் காண்பது கனவா, நனவா என்றுகூட எண்ணினேன். அத்தகைய அழகு! அத்தகைய எழில்! சொர்ணபிம்பம் போன்று சொகுசாக நடந்து சென்ருள் அச்சுந்தரவல்லி. கணநேரம்தான் கண்டேன் அக்கட்டழகியை. இருந்தும் என் மனதைவிட்டு நீங்கினுளில்லை அந்த மனேகரி. அன்றிருந்து இன்றுவரை அவள் உருவம் என் உள்ளத்தில் அழியாது, மறையாது நிலைபெற்று விட்டது.

மாரா:- இவ்வளவுதானே!யாரந்தச் சுந்தரவல்லி? சொல்.

வல்ல :- சுலபமாய்க் கேட்டுவிட்டாய் மாரா. ஆனுல் அவள் பெயரைச் சொன்னுல் திடுக்கிடுவாய். அவள்தான் சோழநாட்டு இளவரசி; இளவரசர் இராசேந்திரனின் அருமைத் தங்கை குந்தவ்வை தேவி!

மாரா :- ஆ! குந்தவ்வை தேவி யாரா! இளவரசியையா காதலித்தாய்?

வல்ல :- திடுக்கிடாதே மாரா. இப்பொழுதாவது தெரிந்து கொள் என் துயரத்தை. நான் முதலில் சொன்னபோது ஏதேதோ கூறினுயே. இப்பொழுது என்ன சொல்கிருய்.

மாரா :- என்ன சொல்வது? எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

வல்ல :- ஆமாம் மாரா. உனக்கு மட்டுமல்ல; யாருக்குமே ஒன்றும் சொல்லத் தோன்ருது. அதனுல்தான் மாரா நான் உள்ளம் தேய்ந்தேன். உரைக்கமுடியாத சோகத்தில் ஆழ்ந்து கிடக்கிறேன்.

மாரா :- வல்லபா உன்னுடைய காதல் நிறைவேறுவது மிகக் கடினம். மன்னர் மகள் குந்தவ்வை, அவளை ஒரு இளவரசனுக்கோ வேறுஎவருக்கோ தான் மணமுடிப்பார்கள். வீணுக நீ ஏன் அந்தப் பெண்ணை நினைக்கிருய். வேறு பெண்தானு இல்லை.

வல்ல :- நீ முதலில் கூறினது என்ன? இப்பொழுது கூறுவது என்ன? வேறு பெண்கள் வேண்டிய அளவு இருப்பது எனக்குக் கூடத் தெரியும். ஆனுல் காதல்! அதுபற்றி உனக்கென்ன தெரியும். உடை மாற்றுவது போல்தான் காதலும் என்று நினைத்துவிட்டாயா?

மாரா :- எது எப்படியிருந்தாலும் இருக்கட்டும். நீ என்னதான் செய்யப் போகிருய்?

வல்ல :- செய்வதைச் சொல்கிறேன் கேள். அந்த அழகு இராணியைச் சந்திப்பேன். என் உள்ளத்தை திறந்து கூறுவேன். ஏற்றுக்கொண்டால் இன்ப வாழ்வு. இல்லையேல் மரணம்தான்.

மாரா :- என்ன வல்லபா? என்ன சொல்கிருய்?

வல்ல :- சொல்வதென்ன! சுந்தரவல்லி ஏற்றுக்கொண்டால் சுகவாழ்வு, இல்லையேல் சாவு. இதைத் தீர்மானித்துவிட்டேன். இதை மாற்றியமைக்க யாராலும் முடியாது. இப்பொழுதே போகிறேன். போய் அந்தப் பளிங்குச் சிலைப்பாவையை பார்த்துவிட்டு வருகிறேன்.

[பேசிவிட்டு வேகமாகப் போகிருன் வல்லபன். திகைப்புடன் அவன் போன திக்கையே பார்த்துக் கொண்டிருக்கிருன் மாரயன்.]

## காட்சி 2

இடம் :- இராசராசன் அரண்மனையில் ஒருபுறம்.

இருப்போர் :- சக்திவர்மன், விமலாதித்தன். சக்திவர்மன் ஒருஆசனத்தில் வீற்றிருக்

கிறான். அவன் அருகே அவன் தம்பி விமலாதித்தன் நின்றுகொண்டிருக்கிறான். இருவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

விமலா :- அண்ணா! வேங்கி நாடு மீது படையெடுக்கச் சோழப் பேரரசர் இராசராசன் ஆயத்தமாயிருக்கிறாரல்லவா?

சக்தி :- ஆம் தம்பி, மன்னர் காலையில்கூட வந்திருந்தார். வெற்றி நிச்சயம். கலக்கம் வேண்டாம், எதிரிகளைத் தூள் தூளாக்குவோம் என்று கூறினார். அதனால் கவலைப்படவில்லை.

விமலா:- வீராதி வீரன் சோழர் குலதிலகம் இராசராசன் இருக்கையில் எமக்கேன் பயம். அது சரி. எப்பொழுதண்ணா படையெடுப்பு?

சக்தி:- வருகிற வாரத்தில் படை புறப்படும். நீ இங்கேயே இருக்கிறாயா?

விமலா:- என்ன அண்ணா அப்படிச் சொல்லிவிட்டீர்கள். என் கைகளென்ன கமண்டலம் ஏந்தி இருக்கின்றனவா? போருக்குப் போகாமல் துறவிபோல் நான் இங்கு உட்கார்ந்திருப்பதா? முடியா தண்ணா முடியாது. இப்பொழுதே புறப்படுவதற்கு ஏற்பாடு செய்கிறேன். நான் தங்களுடன் வருவேன்.

சக்தி:- நீ எங்களுடன் வந்தால் குந்தவையை யார் தம்பி பார்த்துக்கொள்வது. உன் மீது அவள் உயிரையே வைத்திருக்கிறாளே.

விமலா:- போங்களண்ணா! விளையாடாதீர்கள்.

சக்தி:- என்ன தம்பி அப்படிச் சொல்கிறாய். இராசராச சோழ மன்னர் உனக்குத்தான் குந்தவையை மண முடிப்பது என்று கூறுகிறாரே. நீ கேட்கவில்லையா?

விமலா:- கேலி செய்யாதீர்கள் அண்ணா. நான் போகவேண்டும், ஒருவரைப் போய்ச் சந்திக்க வேண்டும் அவசரமான அவசியமான விஷயம்.

சக்தி:- எனக்குத் தெரியும். சோழ குலக்கொடி குந்தவ்வையைத் தானே சந்திக்கப் போகிறாய், எனக்குத் தெரியும் தம்பி.

விமலா:- போங்களண்ணா!

[கோபத்துடன் கூறிவிட்டுச் செல்கிறான் விமலாதித்தன்.]

## காட்சி 3

இடம்:- அரண்மனையை அடுத்துள்ள மலர்த்தோட்டம்.

இருப்போர்:- குந்தவ்வை மகிழ மரத்தடியில் நின்றிருக்கிறாள்.

முழு நிலவு நாளுக்கு மூன்று நாட்கள் இருப்பதால் வானத்தில் வெண்ணிலவு ஒளியுமிழந்துகொண்டிருந்தது.

மகிழ மலர்கள் பூத்து அதன் நறுமணம் எங்கும் கமழ்ந்து கொண்டிருந்தது. மலர்த்தோட்ட மாகையால் பல வண்ண மலர்களின் மணம் எங்கும் வீசிக்கொண்டிருந்தது.

பரபரப்புடன் நின்றிருந்தாள் குந்தவ்வை. அவள் யாரையோ ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்த ஆள் வராததினால் அவள் முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் தென்பட்டது.

சிறிது நேரம் பொறுத்து காலடியோசை கேட்டது. அவள் எதிர்பாத்த ஆள் போலும். 'வரட்டும், வந்ததும் வகையாகக் கேள்வி கேட்டுத் திணறடிக்கலாம்' என்று மௌனமாக இருந்தாள்.

வந்த ஆள் அவள் அருகில் நின்றான். அவள் பின்னழகையே பருகிக்கொண்டிருந்தான். அவளும் திரும்பிப் பாராது மௌனமாக நின்றிருந்தாள். அவன் அவள் கண்களைப் பொத்தினான்.

'ஸ்பரிச' வேற்றுமையால் திடுக்கிட்டு விலகி நின்றாள். மேகங்கள் மூடியிருந்த நிலவு மறுபடியும் 'வெளிச்சம்' போட்டுக் கொண்டிருந்தது.

எதிரே நிற்பவன்—வல்லபன் தான்.

திகைப்பும் கோபமும் கொண்டவளாய் குந்தவ்வை பேச ஆரம்பித்தாள்.

குந்த:- யார், வல்லபனா? என்ன இது?

வல்ல:- ஆம் இளவரசி. நான் தான். இளவரசர் இராசேந்திரனின் அருமை நண்பர்களில் ஒருவன்.

குந்த:- தெரிகிறதே தங்கள் நடத்தை மூலமாகவே. இங்கு எதற்காக வந்தீர்கள்?

வல்ல:- கேள்வி வேடிக்கையாக இருக்கிறதே!

குந்த:- வேடிக்கையா? என்ன உமக்கு மூளை ஏதேனும் கோளாறா?

வல்ல:- ஆம் தேவி. இந்த முழு மதியைக் கண்டதும் மூளை முழுதுமே கோளாறாகிவிடுகிறது.

குந்த:- வல்லபா! பைத்தியம் போல் உளறாதே. யாரிடம் பேசுகிறாய் என்பதை உணர்ந்து பேசு.

வல்ல:- தெரியும் தேவி. யாரிடம் பேசுகிறேன் என்பது நன்றாகத் தெரிகிறது. அகில உலகத்தையும் வென்று ஆளும் வீராதி வீரர் சோழப் பெருமன்னர் இராசராசரின் திருக் குமாரி இளவரசி குந்தவ்வை தேவியாரிடம் பேசுகிறேன் என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. ஆனால்......

குந்த:- என்ன ஆனால்?

வல்ல:- அதுமட்டுமில்லாமல் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட குமரி குந்தவ்வையிடம் பேசுகிறேன் என்பதும் தெரிகிறது.

குந்த:- உளறாதே.

வல்ல:- உளறவில்லை, தேவி. உங்களை அன்று ஒருநாள் கண்டேன். மனதைப் பறிகொடுத்தேன். இன்றுவரை என் உள்ளத்தில் உங்கள் உருவம் தான் உள்ளது. காதல் வலையில் வீழ்ந்து தத்தளிக்கிறேன். தாங்கள் தான் எனக்கு எல்லாம்; மறுக்காதீர்கள். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்.

குந்த:- பரிதாபப் படுகிறேன் வல்லபரே. கண்டதும் கன்னியர் மீது காதல் கொள்வது தவறு. அதுவும் அவள் கருத்

தையறியாமல் காதல் புரிவது அதைவிடத் தவறு.

வல்ல:- தெரியும் தேவி. ஆனால் மனம் கேட்கிறதா. தாங்களின்றேல் எனக்கு வாழ்வில்லை. இது உறுதி!

குந்த:- மறுபடியும் இரக்கப்படுகிறேன். உன்னுடைய காதல் ஒருதலைப் பட்டது. காதல் என்றால் இருவரும் மனமொத்து அன்பு காட்டுவதே. ஆதலால் வீணாக மனதை வருத்திக் கொள்ளாதே. என் உள்ளத்தை பறி கொடுத்தவர் வேறொருவர் இருக்கிறார்.

வல்ல:- (ஆச்சரியத்துடன்) என்ன?

குந்த:- ஆச்சரியப்படாதீர், என் கருத்தைக் கவர்ந்த காதலர் விமலாதித்தன்!

வல்ல:- விமலாதித்தனா? சாளுக்கிய இளவரசன் விமலாதித்தனா?

குந்த:: ஆம், அவரேதான்.

[அது கேட்டுத் திகைப்படைகிறான், வல்லவன். அவனால் மேற்கொண்டு பேச முடியவில்லை, மௌனமாகத் திரும்பிவிடுகிறான்.

அவன் நிலைக்காக இரங்குகிறாள் குந்தவ்வை. அவனைக் கூப்பிடலாமா என்று எண்ணுகிறாள். பின் ஏதோ நினைத்தவளாய் பேசாமல் இருக்கிறாள்.

இவற்றையெல்லாம் தூரத்தில் இருந்தவாறே பார்த்துக் கொண்டிருக்கிறான் விமலாதித்தன். அவன் மனதில் சந்தேகத்தின் வித்து ஊன்றப்படுகிறது. அவர்கள் பேசியது அவன் காதில் விழுந்திருந்தால் அவன் சந்தேகம் கொண்டிருக்க மாட்டான். அது விழாததால்தான் சந்தேகமடைந்தான். ஆவலோடு வந்தவனுக்கு ஆத்திரமேற்பட்டு விட்டது. எத்துணை தான் நெருங்கிப் பழகியிருந்தாலும் திடீரென்று சந்தேகமேற்படுவது இயல்பல்லவா? அதுபோல்தான் விமலாதித்தனும் சந்தேகம் கொண்டான். அவனுக்கேற்பட்ட கோபத்தில் அவனுடைய அருமைக் காதலி குந்தவ்வையைக் காணக் கூடப் பிடிக்கவில்லை.

எவ்வளவு வேகமாக வந்தானோ அவ்வளவு வேகமாகத் திரும்விட்டான்.

குந்தவ்வை வெகு நேரம் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடனும், சஞ்சலத்துடனும் திரும்பினாள் அரண்மனைக்கு. தன் காதலன் வராத காரணம் அவளுக்குப் புரியவேயில்லை.]

## காட்சி 4

இடம்:- வேங்கி நாட்டுப் போர்க்களம்

பாசறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய கூடாரத்தின் மீது சோழப் பேரரசின் கொடி பறந்து கொண்டிருக்கிறது.

போரில் சோழப் படை வெற்றிபெற்றதுவேங்கிநாட்டுப் படை துவம்சம்செய்யப்பட்டது. சோழப் படை வெற்றி முழக்கத்துடன் கோலாகலமாக இருந்தது.

சோழ நாட்டுக் கொடி பறந்து கொண்டிருந்த கூடாரத்தினுள் மன்னன் இராசராசன், சக்தி வர்மன், விமலாதித்தன், இராசேந்திரன் ஆகியோர் இருக்கின்றனர். அவர்கள் முகத்தில் கவலையின் அறிகுறிகள் தென்படுகின்றன.

அங்கு போடப்பட்டிருந்த கட்டிலில் காயத்துடன் படுத்திருந்தான் வல்லபன். அவன் உடல் முழுவதும் கட்டுகள் போடப்பட்டுப்படுத்திருந்தான். அவன் அருகில் அரண்மனை மருத்துவர் நின்றிருந்தார்.

எல்லோரும் கவலையோடு வல்லபனையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

மருத்துவர் ஏதேதோ மூலிகைகளை அவனுக்குக் கொடுத்து, பின் சில பச்சிலைகளின் சாற்றை அவன் மூக்கில் பிழிந்தார். சிறிது நேரத்தில் அவன் கண் திறந்தான்.

ஆவலோடு எல்லோரும் அவனையே பார்த்தனர். இராசேந்திரன் "வல்லபா" என்று அன்புடன் அழைத்தான்.

வல்லபன் மெதுவாகச் சிரிக்க முயன்றான், முடியவில்லை. பின் 'விமலா' என்று முனகினான்,

கண்களில் கண்ணீரைச் சி தியவாறுவிமலாதித்தன்வல்ல பன் அருகில் வந்தான்.

வல்லபன்தானே விமலாதி தனின் உயிரைக்காப்பாற்றினான்

வேங்கிப் போரிலே வீராவே மாகப் போரிட்டுக்கொண்டிரு தான் விமலாதித்தன். சுற்றி சுழன்ற அவன் வாளுக்குப் பலியானோர் ஏராளம். அப் பொழுதுதான் ஒருவன் மறை முகமாக இருந்து வீசிய வாள் விமலாதித்தனை காயப்படுத்தி விட்டது. நெடு நேரமாகப் போரிட்டதாலும், காயத்தாலும் களைப்பாகிவிட்டான் அவன் கொஞ்ச நேரமானால் அவன் சோர்ந்து சாய்ந்துவிடுவான்.

அப்பொழுதுதான் பாய் தான் வல்லபன், சாய்ந்தன தலைகள். வெற்றிக் களிப்பில் அவன் அயர்ந்திருந்த நேரத் தில் ஒருவன் வேலைப் பாய்ச்சி விட்டான். பின் இராசேந்திரன் வந்தான். இருந்த சொற்ப எதிரிகளும் ஓடிவிட்டார்கள். காயப்பட்ட வல்லபனை கூடா ரத்திற்கு எடுத்துச் சென்றனர்.

"என்ன வல்லபா? உடலை அலட்டிக் கொள்ளாதே என் றான் விமலாதித்தன்; வல்ல பனை நோக்கி.

வல்ல:- (மெதுவாக) இல்லை விமலா, உன்னிடம் ஒன்று கூற வேண்டும். என் அருமைத் தங்கையாகக் கருதுகிறேன் குந்தவ்வையை. அவளை மணந்துக்கொண்டு மகிழ்வுடன் வாழ். முன் என்னமோ நான் அவளைக் காதல் செய்தது உண்மை, ஆனால் அவள் கருத்தைக் கவர்ந்தவன் என்றறிந்ததும் அவளை தங்கையாகக் கருதினேன். அன்று இரவு அதைக் கேட் விட்டுத்தான் திரும்பினேன். இதுவே என் விருப்பம், நா உயிர் வாழ்வது இயலாது நான் வருகிறேன்.

[அது கேட்டு விமலாதி தன் தெளிவு பெற்ற வல்லபனின் பெரு தன்மையையும், உதா குணத்தையும் எண்ணி னான். அவன் கண்களி கண்ணீர் திரையிட்ட வல்லபனின் உயிரு உடலைவிட்டுப் பிரிந்தத

*

# டாக்டர் ரைசல்

—[சுகுண]—

ஸ்பானிய நாட்டுச் சரிதத்திலே, டிசம்பர் 30-ந்தேதி கறை படிந்த ஓர் நாள். துடைத்துக்கொள்ள முடியாதபடி அழியாது படிந்து விட்ட கறை அது!

டாக்டர் ரைசல் நாட்டுப் பற்றுக்கொண்ட ஓர் நல்ல மேதை. அவரது ஒவ்வொரு மூச்சிலும் தேசப்பற்றுதான்வெளிப்பட்டது. அத்தகைய நல்லவரை, ஸ்பானிய அரசாங்கம், 1869-ம் ஆண்டு டிசம்பர் திங்கள், 30-ம் நாளில் துப்பாக்கிக்கு இரையாக்கி, அவர் கொட்டிய குருதியில் குளித்து மகிழ்ந்தது.

ஆனால் இன்று......! மறைந்த அந்த மேதையின் நினைவுகளை ஒவ்வோராண்டும் பெரிய சிலையொன்று அமைத்து வீர வணக்கம் தெரிவிக்கின்றது, புகழ்மாலை சூட்டுகின்றது.

அவர் வாழ்ந்த நாளில் அவரை வாட்டி வதைத்தது! ரைசல் செய்த தவறுதான் என்ன?

புரட்சிக்கு வித்திட்டவர்

கழகங்கள் பல நடத்தியவர்

பத்திரிகைகள், புத்தகங்கள் பல எழுதிப் புரட்சிக்கனலை மூட்டியவர்—

இதுபோன்ற 15-குற்றச்சாட்டுக்கள். இவைகளில் பல நிரூபிக்க முடியாதுபோய், சிலவற்றைக் குற்றங்கள் என நிரூபித்துக்காட்டி சுட்டுக்கொன்றனர், மனம் கலங்கா அம் மாவீரனை!

சட்டத்தைச் சாதகமாக அமைத்துக்கொண்டவர்கள் எதைத்தான் செய்ய இயலாது?

அந்நிய ஆதிக்கத்தினின்றும் நாடு விடுதலை பெறப் பாடுபட்டு, வாழ்வையே அந்தப் பணிக்குக் காணிக்கையாக்கிய அந்த வீரரின் வாழ்வு, நாட்டுப்பற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் உற்சாகமூட்டக் கூடியது.

டாக்டர் ரைசல், தான்கற்ற மருத்துவத்தின் உதவியால் பல உயிர்களைக்காத்து, பிணியைப் போக்கி மக்களிடையே நன் மதிப்பைப் பெற்றார். தன்னுடைய கவிதைகள், கதைகள், நாடகங்கள் மூலம் மக்களின் மனப் பிணியை நீக்கி உள்ளங்களைக் கவர்ந்தார்.

ஜோஸ்ரைசல், "டாக்டர்ரைசல்" ஆக வருவதற்கிடையே எவ்வளவு இடையூறுகள்! தடைகள்! வேதனை படிந்த சம்பவங்கள்! பணமுடையின் காரணமாக, 1885-ல் அதாவது தன்னுடைய 24-வயதில் டாக்டருக்குப் படித்தும், 3-ஆண்டுகள் பட்டம்பெற முடியவில்லை, அவரால். அரசாங்கத்தின் தொடர்ந்த கண்காணிப்பினிடையே புத்தகங்கள் இயற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

*

ஜோஸ்ரைசல், கலம்பா எனும் நகரத்தில் 1861-ம் ஆண்டு, ஜூன் திங்கள், 19-ம் நாள் பிறந்தார். மூன்றாவது வயதிலேயே எழுத்துக்களைக் கற்றுக்கொண்டு, அரிச்சுவடியைத் துணையாகக்கொண்டு மூத்த சகோதரியின் கதைப் புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்துவிட்டார். பதினாறாவது வயதில் B.A. பட்டம் பெற்றார்.

ரைசலின் இளமை நாட்களில் காணப்பட்ட இரக்கம், பெருந்தன்மை ஆகிய குணங்கள் அவருடைய வாழ்நாள் பூராவும் காணப்பட்டது. அவர் கடைசியாக எழுதிய நூலில் காணப்படும் வாசகமே இதற்குச் சான்று.

"என்னுடைய வறுமை வாழ்விற்காக நான் வருந்தவில்லை. நாட்டிற்கு உழைப்பதற்கேற்ற திறமை போதிய அளவில் இல்லையே எனத்தான் நான் வருந்துகின்றேன். என்னால் முடிந்ததை என் அதிகாரத்திற்குட்பட்டதை, அதிகமாகத் தேவைப்படுவதைச் செய்ய வேண்டுமென்பதுதான் என விருப்பம்"

அரசாங்கத்தின் கழுகுப் பார்வை, அவரைப் பிறந்த நாட்டைவிட்டே செல்லத்தூண்டி விட்டது.

1882-ஆண்டு, மே மாதம் 5-ந் தேதி பிறந்த நாட்டு மண்ணை விட்டுப் பிரிந்தார்.

பெண்மையின் பிரதிநிதி என்று உயிரையே வைத்திருந்த மனைவி லியோனாரிடம் கூறிவிட்டு உள்ளத்தை உருக்கும் பிரிவை அனுபவித்தார். ஆகவே அது கடைசிப் பிரிவாகவும் ஆகிவிட்டது!

இந்த நேரத்தில், பிலிப்பைன் நாட்டு மக்கள் ஓர் பெரிய புரட்சிக்கு வழி வகுத்துக்கொண்டிருந்தனர். ஆனால் டாக்டர் ரைசல், நாட்டு மக்கள் கல்வி அறிவு பெறுதலை முதன்மையென எண்ணினார்.

**பொங்கல் வாழ்த்துக்கள்**

தமிழர் திருநாள் பொங்கலன்று நண்பருக்கு அனுப்புவதற்கேற்ற சிறந்த வாழ்த்திதழ்கள் தயாராகியுள்ளன. உழவர் சித்திரங்கள், இயக்க முன்னணி வீரரின் படங்கள், இயற்கைக் காட்சிகள், திரைப்பட நடிக நடிகையரின் படங்கள் நிறைந்த 50-க்கும் மேற்பட்ட டிசைன்கள், வாழ்த்துக்கேற்ற உரைகள், மாதிரி செட். 1-க்கு ரூ. 2-50 M. O. செய்யவும். தபால் செலவு இலவசம்.

100 வாழ்த்துக்கள் விலை ரூ. 5-00

100 வாழ்த்துக்கள் உரையுடன் ரூ. 7-50

**செங்கதிர் பதிப்பகம்**

28, ஏழு கிணறு தெரு, சென்னை-1

"பள்ளியொன்று கட்டுவேன்—
கல்வி அறிவை வழங்குவேன்.
ஒளி இன்றேல் வழி இல்லை"
என்றார்.

மாட்ரிட்டில் உள்ளபோது, டாக்டர் ரைசல், பல இன்னல்களுக்கிடையே வாழ்வு நடாத்த வேண்டியிருந்தது. நாட்டிலிருந்த கட்டுப்பாட்டின் காரணமாக, ரைசலின் தந்தையாலும் பணம் அனுப்ப இயலாது போய்விட்டது. மாமன் அனுப்பிய பணமும் நிறுத்தப்பட்டது. உண்ண உணவின்றி வாடும் நிலையும் ஏற்பட்டது.

கிரேக்கப்போட்டியில் வெற்றி பெற்றுப் பரிசு வாங்கிய நாளில் கூட பட்டினி கிடந்துள்ளார், டாக்டர் ரைசல்.

தாயின் பழுதாகிவிட்ட கண்களைச் சிகிச்சை செய்து குணமாக்கலாம் என்ற நம்பிக்கையுடன் தாயகத்திற்குத் திரும்பினார்.

பிலிப்பைனில், நாட்டு மக்கள் ஸ்பானியர்களுக்கு எதிராகக் கிளப்பிய நாட்டு உணர்ச்சி மக்களிடம் அதிகம் பரவிவிட்டதை உணர்ந்தார்.

அதற்குக் காரணம் அவர் எழுதிய நூல் ஒன்றுதான் என்றும் தெரியவந்தது. ஆட்சியாளர்களின் கொடுமை, ரைசலை மீண்டும் நாட்டைவிட்டுத் துரத்திற்று.

ஸ்பெயின் மீதிருந்த நம்பிக்கையும் தளர்ந்துவிட்டது.

அமெரிக்காவிற்குப் பயணமாகி, அங்கிருந்து இலண்டனுக்குச் சென்றார்.

இந்த நேரத்தில்தான், மணிலா நாட்டு கவர்னர் ஜெனரல் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்ததாலும், நேரிடையாகக் கடிதம் பெற்றதாலும், நண்பர்கள் பலரின் அறிவுரைகளையும் கேட்காது, மணிலாவிற்குப் பயணமானார்.

மணிலாவிற்கு வந்ததும், 1892-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ந் தேதி, 'ரைசல் பார்ட்டி' என்ற ஓர் கழகம் ஆரம்பித்தார்கள். அந்தப் பெயரை மாற்றி, 'பிலிப்பைன் லீக்' என்று வைத்தார்.

இருந்தும்கூட, ரைஸல் கோர்ட்டின்முன் நிறுத்தப்பட்டார். சில இரகசியக் கடிதங்களைக் கடத்தி வந்ததாகக் குற்றச்சாட்டு. சாண்டிகோக் கோட்டையில் (Fort San-tigo) சிறையில் தள்ளப்பட்டார். அங்கிருந்து, டபிதானுக்கு (Dapi-tan) கப்பலில் அனுப்பப்பட்டார்.

ரைஸலை நாடு கடத்தியதால், நாட்டில் குழப்பமும் கொந்தளிப்பும் அதிகமாயிற்று. பந்தை அடிக்க அடிக்க மேலே கிளம்புவதுபோல், புரட்சியை அடக்க அடக்க, அது இன்னும் உயரத்தானே எழும்பும்!

(Bonifacio) போனிபேஷியோவின் தலைமையில் புதிய கழகம் ஒன்று நிறுவப்பட்டது. மஞ்சள் ஜுரம் என்ற ஓர் கொடிய நோய், க்யூபா நகரெல்லாம் பரவியபோது, உத்தரவின்பேரில் வெளிவந்தார்.

ஆனல் வரும் வழியில் சூயஸில் ஓர் படை தயாராகக் காத்திருந்து, அவரை உடனடியாக சிறைக்கு அழைத்துச் சென்றார்கள், மீண்டும் மணிலாவிற்கு!

உண்மையான குற்றத்திற்காக உயிரைவிடத் துளியும் வருந்தவில்லை, டாக்டர் ரைசல்! ஆனல் ஜோடிக்கப்பட்ட, உண்மை துளியும் இல்லாத குற்றச்சாட்டுகளுக்காக வருந்துவதை அவர் உள்ளம் தாளவில்லை.

ஸ்பானிய ராணுவக் கோர்ட்டில் 1896ம் ஆண்டு, டிசம்பர் மூன்ருந் தேதி வழக்கு ஆரம்பமாயிற்று.

வழக்கு நடந்துகொண்டுள்ள போது, உயிர் நண்பராயிருந்த கவர்னர் ஜெனரல் பிராங்கோவும் பதவியினின்றும் வெளியேற்றப்பட்டார்.

ரைசலின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, பதினைந்து!

அதன் விளைவு......!

1896ம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 30ந் தேதி காலை ஏழு மணி அடித்து மூன்று நிமிடங்கள் ஆனதும், சுதந்திரத்திற்காக வாழ்நாளெல்லாம் பாடுபட்ட ஒப்புயர்வற்ற, மறக்கமுடியாத தேசிய வீரர் ரைசலை, ஸ்பானிய அரசாங்கம் சுட்டுக்கொன்றது.

35 வயது நிரம்பாத நாட்டுப் பற்றுடைய இந்த வீரர், 1896ம் ஆண்டு டிசம்பர் 30-ம் நாளிலே, உயிரைத் துளைக்கும் துப்பாக்கியை ஏந்திய படையின் எதிரே, மரணத்தைத் தழுவத் தலையை பூமியை நோக்கிப்பாராது, வானத்தைப் பார்த்தவண்ணம் வெற்றிப் பார்வையுடன் நடந்தார்.

★


46-வது வட்ட தி. மு. க. வளர்ச்சி நிதிக்காக

5—1—1958 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு
தியாகராய நகர் வாணி மகாலில்

கலைஞர் மு. கருணாநிதி M. L. A.
அவர்கள் தலைமையில்

சென்னை முத்தமிழ் நாடக மன்றத்தார் நடிக்கும்

"எதிரொலி"

என்னும் சமூக சீர்திருத்த நாடகம் நடைபெறும்.

கதை, வசனம், பாடல்: டி. கே. தண்டபாணி

கட்டணம்:— ரூ. 2—00, 1—00 00—50.

ஆராய்ச்சி

# கர்னீலியஸ் புதிர்!

திராவிடர் என்போர் தென்னிந்தியாவின் சுதேசிகள் அல்ல. மிகப் புராதன காலத்தில் எகிப்திலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்து குடியேறினவர்களே. எகிப்திலிருந்து முதன் முதல் தென்னிந்தியா வந்த எகிப்தியர்கள் பொதிய மலையைச் சுற்றி தமிழ்நாட்டில் குடியேறினர். அகஸ்திய முனியும் அவரது சகாக்களுமே, அப்படிக் குடியேறினவர்கள். அகஸ்திய முனி என்ற பெயர் பழைய எகிப்திய மன்னர் ஒருவரது பெயரின் திரிபுதான்.

*

எகிப்திலிருந்து தென்னிந்தியா வந்தவர்கள் அகதிகள் கூட்டம். அவர்கள், 'ராவணா' இனத்தைச் சேர்ந்தவர்கள். 'அமான்ரா' எனும் இனத்தைச் சேர்ந்தவர்களால் 'ராவணா' இனத்தவர்கள் முறியடிக்கப்பட்டு, இங்கு விரட்டப்பட்டார்கள்.

*

'ராமா' என்கிற பெயர் 'அமான்ரா' என்ற பெயரிலிருந்து வந்ததே. இந்த அகதிகள் படகுகளில் கடல் கடந்து தென்னிந்தியாவின் கீழ்க்கரையில் வந்து குடியேறினார்கள். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக உள் நாட்டிலும் பரவினர். இதற்குப் பிறகே, சோழ பாண்டிய ராஜ்யங்கள் உருவாயின. மலையாளம் பேசிய சேரர்களும் எகிப்திலிருந்து வந்து தென்னிந்தியாவின் கடற்கரையில் குறியேறியவர்களே. எகிப்தியப் போரில்" வெற்றி பெற்ற அமான்ரா கூட்டத்தாரும், பின்னர் வட இந்தியாவுக்கு வந்து குடியேறினர்.

* * *

*இதென்ன புதிய புதிராயிருக்கிறதே என்று திகைப்பீர்கள்! புதிர் போடுவதும் அதை விடுவிப்பதும்தானே ஆராய்ச்சியாளர்களுக்குரிய கடமைகள்! ஆகவேதான் அன்பர்* ஜே. டி. கர்னீலியஸ் *என்பார், கடந்த டிச. 17-ந் தேதி சென்னை தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தில் பேசியபோது, இக்கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்! செய்தியை, 'சுதேசமித்திரன்' ஏடு, 'திராவிடரும் அந்நியரே' எனும் பொருள்பட மகுடமிட்டு, முதல் பக்கத்தில் போட்டு, ஏதோ ஒருவித ஆனந்தம் கண்டிருக்கிறது!!*

*'திராவிடர்' என்பது பற்றிய ஆராய்ச்சி, எடுப்பார் கைப்பிள்ளை போல இருந்திடினும், அவர்கள்தான் இந்த நிலப்பரப்பின் மூதாதையர் என்பதையும் — அந்தத் 'திராவிடர்'களுக்கும் வடக்கே வந்து குடியேறிய 'ஆரியரு'க்குமிடையே போராட்டங்கள் பல நடந்தன என்பதும் தெளிந்து போன முடிவு.*

*கர்னீலியஸ், வடக்கே வந்தவரும், தெற்கே வந்தவரும் எகிப்திலிருந்து வந்தவர்கள் என்று புதியதொரு புதிர் போடுகிறார்! ஆராய்ச்சியாளரல்லவா, ஆகவே, அந்த உரிமை அவருக்குண்டு. ஆனால், தன்னுடைய ஆராய்ச்சிக்கென அவர் கூடியிருந்த மக்களுக்கு, 'இரு எகிப்திய மன்னர்களின் படங்களையும்' சான்றாகக் காட்டினாராம்! அந்த மன்னர்களின் நெற்றியிலும். மார்பிலும், கைகளிலும் வைணவர்களின் வடகலை நாமம்போல இருந்ததாம்!*

*கிறிஸ்து பிறப்பதற்கு முன், எழிலோடு விளங்கிய நாடுகளில் ஒன்று எகிப்து. எகிப்தும் ரோமும் எழில்பெற்று விளங்கிய நாட்களிலே, புகழேணியின் உச்சியில் நின்ற பூமி தமிழகம். தமிழ் நாட்டின் முத்து, எகிப்திலே குவிந்ததென்பர்! கிரேக்கமும் ரோமாபுரியும் தமிழகத்து மண்ணின் அகிலையும் தேக்கையும் போட்டிபோட்டுக் கொண்டு வாங்கிச் சென்ற காலம் அது!!*

*நிலைமை அப்படியிருக்க, கர்னீலியஸ், எகிப்தே நமது மூதாதையர் கூடம், அங்கிருந்தே ஆரியரும் வந்தனர், இங்கு நடப்பதற்கு முன்பே அங்கு 'ஒரு' இராவண இராமச் சண்டை நிகழ்ந்தது என்றெல்லாம் கூறுகிறார். ஆராய்ச்சியாளர்கள், ஒரு சிறிதும், ஒப்பார் இவர் கூற்றை.*

* * *

*இதோ ஒரு கட்டுரை!* S. T. *மூர்த்தி முதலியார் என்பார் எழுதிய "பாவலர் பாடல்" எனும் நூலின் இரண்டாம் பகுதியிலுள்ள "தமிழ் மொழியின் பிரதாபமும் கலாசாலை மாணவர்களுக்கோர் சற்புத்தியும்" என்கிற விளக்கத்தைவைத்து தோழர் பாண்டியன் என்பார் அனுப்பியுள்ளார், நமக்கு.*

*அகஸ்தியர்—எகிப்துச் சரக்கு என்கிறார், கர்னீலியஸ்! இதோ, வரும் விளக்கம் காண்க!!*

*" தமிழ் — இந்தச் சொல்லை, மூன்று முறை அடுத்தடுத்து, ஆனால் ஒரே மூச்சில், சொல்லிப் பார்த்தால், அது, " அமிழ்து! அமிழ்து !!" என மருவுவதைக் காணலாம். இன்பத் தமிழுக்கு இது ஓர் இணையற்ற பெருஞ் சிறப்பு.*

*தமிழில் உள்ள "ழகர" ஒலி, தரணியில் வேறு எம்மொழியிலுமில்லை. இதுவும் அதற்கே உரித்தான தனிச்சிறப்பு.*

*இத்தகைய நமது முத்தனைய தமிழ்த் திருமாதா, எத்தனை ஆண்டுகளுக்குமுன் அவதரித்தாள்—என்று, அகிலத்து அறிஞர்கள் எவராலும் ஆராய்ந்து கூற முடியவில்லை, அது மட்டுமல்ல ; தமிழுக்கு உருவும், திருவும் கொடுத்த உத்தமன், உயர்பெரும் அறிஞன்—யாரென்றும் உலகத்தோரால் காணமுடியவில்லை, அதனால்தான் போலும், "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ் !" என்று அதனைச் சிறப்பித்துக் கூறுகிறார்கள் புலவர் பெருமக்கள்.*

*ஆனால், ஒருவேடிக்கையென்னவென்றால், பார்வதி, பரமே*

வரன் அருளால், குருநாதன் அகத்திய முனிவனால் ஆக்கப் பட்டதே தமிழ் — என்று! இக் காலத்தில், இந்த இருபதாம் நூற்றாண்டிலும்கூடச் சிலர் கூறி வருகிறார்கள். "கல்கி" இந்தப் புராணப் புளுகிற்கு ஆதாரமாகத் தன் தீபாவளி மலரில், கதைச் சித்திரமே கூடத் தீட்டிக் காட்டுகிறது! இது அப்பழுக்கற்ற "அசல் பொய்" என்பது, சிறிது சிந்தித்துப் பார்த்தால், செவ்வனே புலப்படும்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய 15,000 ஆண்டுகளுக்கு முன்பு, பொதிகை மலையில், அவலோகித முனிவர் என்றோர் தமிழறிஞர் இருந்தார். இவரைச் சிலர் ஜைன மதத்தைச் சார்ந்தவரென்றும், வேறு சிலர் 'இவரேதான் புத்தர்' என்றும், கூறுவராம். புத்தர் பிறந்ததே சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்புதான்; ஜைனத்தின் தோற்றமும் அப்படியே. ஆனால், அவலோகிதரின் காலமோ, 15,000 ஆண்டுகளுக்கும் முந்தியது. இதிலிருந்து, அவர் மேற்கூறிய மதங்களிரண்டையும் நினைத்துக் கூடப் பார்த்திருக்க முடியாது என்பது வெள்ளிடை மலையென விளங்கும். அதே நேரத்தில், அவலோகிதர் பூர்வமத சித்தாந்தத்தைத் தழுவியவர் என்றும் நூல்களில் காணக் கிடக்கின்றன.

ஆதிகாலத்தில், திராவிடர்கள், தமக்கென எந்த ஒரு மதத்தையும், கடவுளையும் கொண்டிருக்கவில்லை,' அவர்கள் வெட்ட வெளியில் நின்றுகொண்டு, ஆகாயத்தை நோக்கிக் கைகளைக் கூப்பி வணங்குவார்களாம். அப்போது ஆலயமோ, அங்கே ஆண்டவனின் விக்ரகமோ, எதுவுமே அவர்களுக்குக் கிடையாதாம். இந்தக் கருத்தை, அக்காலக் கடவுள் வழிபாட்டு முறையை, E. W. Thompson, M. A., என்பவர், "Imignation of the Aryans" என்ற தமது நூலில், It was a time for open-air worship, without idol or temple" — எனத் தெளிவுபட எழுதியுள்ளார். பிற்காலத்தில், ஆரியரின் வருகைக்கு அப்புறம் ஏற்பட்டவைதான், இன்றும், நின்று நிலவிவருகின்ற ஆலயங்களும், விக்ரக வழிபாடுகளுமான இந்து மதத்தை யொட்டிய மூடப் பழக்க வழக்கங்கள், இது ஒருபுறமிருக்க, அகத்தியர் வரலாறு பற்றி ஆராய்வோம்.

வடமொழியில் வல்ல அகத்திய முனிவர், எதனாலோ, தம்முடைய சீடர்களை அழைத்துக்கொண்டு, தென்னகம் நோக்கிப் புறப்பட்டிருக்கிறார். அப்போது தமக்கு முன்னே, அணை கடந்த சாகரம் போலும், அடக்கிட இயலாப் புயல் போலும் அங்கே ஆனந்த நர்த்தனம் ஆடிக்கொண்டிருந்த அழகு தமிழின் ஆற்றலைக்கண்ட அம்முனிவர் பெருமான், "தமிழைக் கற்றாலன்றி நாம் இத் தட்சிண பாகத்தில் வாழ்தல் இயலாதென"க் கண்டு, அவ்வமயம் தமிழ்ப் பெரும் அறிஞராய்த் திகழ்ந்த, பொதிகைமலையில் இருந்த அவலோகித முனிவரைக் கண்டு, அவரிடம் பணிவன்போடு பாடம் கேட்டு, பலகாலம் சீடனாக இருந்து, சிங்காரத் தமிழைச் சிக்கறக் கற்றுத் தேர்ந்து, அதில் வல்லுநராகியிருக்கிறார்.

அவலோகிதர் காலத்துக்குப் பின்னால், அகத்தியரே தமிழ்ப் பெரும் புலவராக விளங்கியிருக்கிறார். ஆனால், அவருக்குவாய்த்த பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான தொல்காப்பியரோ, "குருவுக்கு மிஞ்சின சீடனாகி"விட்டார். இயற்றமிழ் இலக்கணத்தை இயற்றியவர் இவரே, இயற்றமிழின் துணையின்றி, இசைத் தமிழும், நாடகத் தமிழும் பயன்பெறாதென்பர் படித்தறிந்தோர்.

ஆக, எழில் கொஞ்சும் தமிழை, நமதருமைத் தாய்மொழியை நமக்களித்தவர் அகத்தியருமல்ல, அவலோகிதருமல்ல, அது, அவர்களுடைய காலத்திற்கெல்லாம் முன்பாகவே ஒளிவீசிப் பிரகாசிக்கும் தீபச்சுடராகத் திகழ்ந்திருக்கிறது, அன்றும், இன்றும், இனி என்றும் அது அணையா விளக்குத்தான்! அதில் ஐயமில்லை.

இதனால், நாம் அகத்தியரை இழிவுபடுத்துகிறோம்— என்றல்ல பொருள், இன்பத் தமிழை நமக்கு ஈந்தவர் அவரல்லவெனகிறோம்; அவ்வளவுதான். அகத்தியரும், அகம், புறம் கண்ட நமது அருமைத் தமிழின் பெருமையை உணர்ந்து, தனது தாய்மொழியாகிய சமஸ்கிருதத்தைக் கூடத் தள்ளிவிட்டு கன்னித் தமிழணங்கின் பூசனையிலேயே காலமெல்லாம் ஈடுபட்டிருந்திருக்கிறார். முதற் தமிழ்ச் சங்கத்தை முதலில் தோற்றுவித்தும் அம்முனிவர் என்பர். இதனைக் காய்சினவழுதி முதல் கடுங்கோனீறாகவுள்ள 89-பாண்டியர்கள், வழிவழி மதுரையம்பதியிலே சிறப்பாகக்கொண்டு நடத்திவந்தனர். அச்சங்கத்தில், 549-பேர் அருந்தமிழ்ப் புலவர்களாகயிருந்து, அதற்கு அணி செய்தனர். பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, மாபுராணம், பூதபுராணம் முதலிய நூல்களெல்லாம் "அகத்தியங்" கொண்டே ஆராயப்பட்டு வந்தன. "அகத்தியம்" அளவிற் பெரிய நூலாகவும், அதிலே சமஸ்கிருதச் சொற்கள் அபரிமிதமாகவும் இருந்தபடியால், மலைவு தோன்றுமிடத்து மாத்திரமே அது பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், "தொல்காப்பியம்" — சுருக்கமாகவும், கருத்துக்கள் தெளிவாகவும் இருந்ததனால், இதுவே அடிக்கடி கையாளப் பட்டது. மாகீர்த்தி அல்லது கீர்த்தி பூஷணப் பாண்டியன் என்ற தமிழ்ப் பெருவேந்தனால் பின்னர், தொல்காப்பியமே இலக்கணங்களுக்கெல்லாம் தலை நின்று பிரகாசிக்கத்தக்கவாய்ப்பும், வசதியும் கிடைத்தன; அதுவே நிலைத்தது.

அகத்தியர் அமைத்த முதற் சங்கமும், அது இருந்த மதுரையம்பதியும் அத்தோடு குமரியாறு ஒழ்தெங்க நாடு முதலிய நாற்பத்தொன்பது நற்றமிழ்த் திருநாடுகளும், இடைச் சங்கம் கண்ட கபாடபுரமும், முதல் இரண்டாம் பிரளயங்களில் சிக்கிக் கடலில் மூழ்கிக் காலத்துக்குக் காவு கொடுக்கப்பட்டன. தமிழக வரலாற்றில் அந்த வரிகளைப் படிக்கும் போது, உண்மைத் தமிழன் ஒவ்வொருவரும் கண்ணீர் வடிக்காமலிருக்க முடியாது. ஒன்றா இரண்டா-அய்யகோ! ஐம்பதுநாடுகளன்றோ ஆழ்கடலின் அகோரப் பசிக்கு இரையாகியிருக்கின்றன!

உலக மொழிகளனைத்தையும், ஆரியம், செமிடிக், துரானியம் என முப்பாற் படுத்தி, அணி வகுத்துக் கூறிய மொழிதத்துவமேதைகள் தமிழைத் துரானியத்தின் பக்கம் சேர்த்து, "தன்னாலியங்கும் சிறப்புமிக்க மொழி"யெனச் செப்பியுள்ளார்கள்.

★

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி ஒரு தீர்மானமும் போட வில்லையே'' என்றேன்.

"சரியாய்ப் போச்சு போங்கள். நீங்கள் காலையில் மயிலாப்பூரில் நடந்ததே, அந்த ஆய்வு மாநாட்டிற்கு வரவில்லையா?'' என்றார்.

என்ன "மயிலாப்பூரிலா......?' என்று கேட்டேன் நான்.

"ஆமாம் சாஸ்திரி மண்டபத்தில். அதைப்பற்றிச் சொல்ல இப்போது நேரமில்லை. கூட்டம் முடிந்ததும் சொல்லுகின்றேன்' என்றார் அவர்.

மயிலாப்பூரில் அன்று காலையில், மாலையில் பொதுக்கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களும் மற்றுஞ் சிலரும் கூடி இந்தித் திணிப்பைக் கண்டித்து முழங்கியதோடு தீர்மானமும் போட்டிருக்கின்றனர். தீர்மானம் என்றால் "இது வேண்டாம், அது வேண்டும்'' என்று விருப்பத்தை வெளியிடும் முறையிலே அல்ல, இதனால், இதனால்...என்று பத்துக் காரணங்களை அடுக்கிக் காட்டி, ஆகவே இந்தியை அரசாங்க மொழியாகக் கொண்டு வந்து திணிக்காதீர்கள். இப்போதுள்ளதுபோல் ஆங்கிலமே நீடித்திருக்கட்டும், என அந்தத் தீர்மானம் கோருகின்றது.

இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் ச. இராசகோபாலாச்சாரியார். வழிமொழிந்து பேசியவர் தமிழவேள் சர். பி. டி. இராசன் அவர்கள்.

இந்தத் தீர்மானத்தை முன்மொழிவதற்கு முன் இராசகோபாலாச்சாரியார் பெருத்த மனப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கிடந்தாராம். இதைப்பற்றி வாயைத் திறப்பதா வேண்டாமா என்று எண்ணிப் பார்த்துப் பின்னரே 'துணிந்து' இம்முடிவுக்கு வந்ததாகக் கூறியுள்ளார்.

> **என் கட்சிக்கும், நண்பர்களுக்கும் இதுபோன்ற பிரச்சினைகளில் நான் கட்டுப்பட்டவனல்லன்.**

என்று கூறிவிட்டுத்தான் தீர்மானத்தை முன்மொழிந்தார். வரிசை வரிசையாகக் காரணங்களை அடுக்கிக்காட்டி, எனவே, இந்தி வேண்டாம் என வாதாடியுள்ளார்.

இதையெல்லாம் அந்த நிருபர் எடுத்துச் சொன்னதோடு தீர்மானத்தின் படி 'நகல்' ஒன்றினையும் எனக்களித்தார்.

காலையில் நடைபெற்ற ஆய்வு மாநாட்டில் கலந்துகொண்டவர்களில், இந்தியை அடியோடு வெறுப்பவர்கள் என்று யாரையும் சொல்லிவிட முடியாது.

ச. இராசகோபாலாச்சாரியார் இந்தியைப் பள்ளிகளில் கட்டாய பாடமாகப் புகுத்தியவர்.

டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் தென்னக இந்தி பரப்பு நிலையத்தின் திறப்பு விழா ஆற்றியவர். அண்மையில் இந்திபரப்பு நிலைய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டவர்கள்.

இவர்களே கூடி இந்தித் திணிப்பு வேண்டாம் என்கின்றனர். இந்தியை மொழியறிவுக்காகப் படிப்போர் படிக்கட்டும். ஆனால் வேண்டாத மக்களின் தலையில் அதைக்கட்டித் தொல்லை தரவேண்டாம் என வேண்டிக் கொண்டனர்.

வேண்டிக் கொண்டது மட்டுமல்ல, வேலை செய்வதற்கென்று ஒரு குழுவினை அமைத்துக்கொண்டனர். செயற்குழு— இல்லை — போர்க்குழு—அமைத்துக்கொண்டனர்.

இராசகோபாலாச்சாரியார்
சி. பி. இராமசாமி ஐயர்
பேராசிரியா இரத்தினசாமி
கோதண்டராவ்
தமிழ்வேள் பி. டி. இராசன்
சுப்பையா
செல்லசாமி

இவர்களை உறுப்பினராகக் கொண்டது அந்தப் போர்க்குழு.

பாசறை அமைத்தனர்—படை வரிசை கூட்டினர்—போர்ப்பறை முழக்கினர்—அந்த ஒலி இந்தியத் துணைக்கண்டத்தின் மூலை முடுக்குகளில் சென்று சென்று எதிரொலித்தது.

எதையும் கேளாத பண்டிதரின் செவிகளுக்கும் அந்த எதிரொலி எட்டியது. எட்டியதும் பிறரைப் போல அவர் என்ன செய்வது என்று ஏங்கித் தவிக்கவில்லை. எவ்வளவு பெரியவர்கள் — எவ்வளவு உண்மை என்று எண்ணிடவில்லை. தம்முடைய வழக்கமான— இந்தியைப் பொறுத்தவரையில் பேசி வரும் — வழா வழா வாதத்தையே பதிலாகத் தந்துள்ளார். இது இன்னும் அவர்களுடைய போர்ப்பரணிக்குப் பக்கபலமாக அமையுமேயன்றி, ஒருபோதும் பரிகாரமாகாது எனபதனை நேரு அவர்களும் அவரது சகாக்களும் உணரும் காலம் தொலைவிலில்லை.

★

குறைந்த விலையில்! சிறந்த முறையில்!!

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

சி. என். ஏ.

தரும்

கருத்துப் படையல்கள்

வண்ண முகப்புடன்

எண்ணத் தொகுப்புகளுடன்

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும்

விலை 8-அணாதான்!!

# 'அயர்' வீரன்

[அன்பெழில்]

"கனம் நீதிபதி அவர்களே! கொற்றத்தை எதிர்த்தேன் என்று குற்றம் சாட்டி என்னைக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளார்கள். இந்த வழக்கு உங்கள் உள்ளத்திலே எத்தகைய உணர்வை ஏற்படுத்தியிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. எனினும் என் உள்ளத்திலே தோன்றுகின்ற சில கருத்துக்களை தெள்ளத் தெளிவாக, திட்டவட்டமாக உங்கள் முன்னிலையிலே தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி செலுத்துகிறேன். இந்நாளை என் வாழ்வில் ஒரு நன்னாளாகவே கருதுகிறேன். அதிகார வர்க்கத்தினரின் இது போன்ற மிரட்டல்களுக்குத் தக்க முறையில், ஏற்ற பதில் அளிப்பது எனது தலையாய கடமை. ஆழ்ந்த அமைதியும், அண்டஞ் சிதறினும் அஞ்சாத நெஞ்சமும், இலட்சிய வெற்றிக்காக எதையும் தாங்கும் இதய பலமும், தியாக உள்ளமும் சுதந்திரம் விரும்பிகளுககு தேவையென்பது தெரியும் எனக்கு.

எமது குறிக்கோள் என்ன? தாய்நாடு விடுதலை பெறவேண்டும். அயர்லாந்துக் குடியரசில் அமைதியும் ஆனந்தமும் பரிபூரணமாக நிலவவேண்டும். இந்த உயர்ந்தகுறிக்கோளுக்காகத்தான் நான் உங்கள் முன்னே நிற்கிறேன். இந்த விடுதலைப் போராட்டத்திலே நமக்கு யாரையும் பழிவாங்கும் எண்ணமில்லை, நமக்கு யாரோடும் போட்டிபோடும் மனமுமில்லை. தாக்குகிறார்கள், நாம் தாங்கிக் கொண்டு வருகிறோம். அவர்களுடைய அடக்குமுறைகளையெல்லாம் அமைதியாக, ஆத்திரத்துக்கு அணுவளவும் இடம் தராமல் சகித்துவருகிறோம். நாம் கொடியர்களல்ல; கொடுமைக்கு உட்படுத்தப்படுபவர்கள், துன்புறுத்துபவர்களல்ல, துன்புறுத்தப்படுபவர்கள். எனவே இந்த விடுதலைப் போரின் வெற்றி, அடக்கு முறைகளைத் தாங்கித் தாங்கி உரமேறிப்போன நமக்குத் தானே தவிர, நம்மை வாட்டி வதைப்போருக்கல்ல,

அயர்லாந்து இராணுவ நீதி மன்றத்தினர் அசையாப் பதுமைகளாக அமர்ந்திருந்தனர். விடுதலை வீரன் மாக்ஸ்வினி நீதிமன்றத்திலே நின்றுகொண்டு உரிமை முரசு கொட்டினார். விடுதலைப் படையினர்க்கும் புதிய எழுச்சியும், போதிய உணர்ச்சியும் ஊட்டினார். முடிவில் அவர் முயற்சி வென்றது. தனியரசு பெற்று, கோனாட்சி ஒழித்து, குடியாட்சி நிறுவிக் கொடி கட்டி வாழ்கிறது அயர்லாந்து.

ஆங்கிலப் பேரரசுக்கு அடிமையாக இருந்த அயர்லாந்து பிணமலைகளை உருவாக்கி, குருதிக் குளத்திலே நீராடி, எலும்புக் குவியல்களைக் கடந்துதான் தன்னை 'சுதந்திர நாடு' என்று சொல்லிக் கொள்ள முடிந்தது. கொடுமையும் பலாத்காரமும், தாண்டவமாடிய அப்பகுதியில்தான் மாக்ஸ்வினி பிறந்தான். அயர்லாந்து குருதி கொட்டிக் கொண்டிருந்த நேரத்தில் 'அன்பு, அமைதி' ஆகிய துறைகளிலே போதனை புரிந்தார் மாக்ஸ்வினி! அகத் தூய்மையிலும், அமைதி வாழ்விலும் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது. ஆங்கிலேய அடக்குமுறையை எதிர்த்து பிரிக்ஸ்டன் சிறையில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த உத்தமர்.

அவருடைய தியாக வாழ்வு விடுதலை விரும்பிகளுக்கு விழிப்பேற்படுத்தும் காவியம். சிறைச்சாலையிலே அச்செயல் வீரன் புகழுடம்பு அடைந்த பொழுது, மறைந்த பெருந்தகை 'தீனபந்து ஆண்ட்ரூஸ்' அவர்கள் "உண்மை வாழ்க்கையிலும் சரி, மரணத்திலும் சரி அந்த அயர்லாந்து தேசபக்தர் அகிலத்தையே தழுவிக்கொண்டார். அவர் விடுத்த செய்தி அயர்லாந்துக்கு மட்டுமல்ல, அன்னிய நாட்டுக்கும் அடிமைப்பட்டு அல்லலுறும் ஒவ்வொரு நாட்டிற்குமேதான்" என்று கூறி இரங்கினார்.

* * *

பதினான்காம் நூற்றாண்டில் கார்க் நகரத்தில் மாக்ஸ்வினி குடும்பத்தார் குடியேறினர். 'சுதந்திர வாழ்வும், சுயேச்சை உள்ளமும் பெற்ற செயல் வீரர்கள்' என்ற சிறப்பு அவர்களுக்கு உண்டு. அயர்லாந்து சமயக் குரவர்கள் நடத்திய பள்ளிக்கூடத்தில்தான் மாக்ஸ்வினியின் ஆரம்பப் படிப்பு நடந்தேறியது. இளம் வயதிலேயே படிப்பில் ஆர்வமும் அக்கரையும் அவருக்கு மிகுந்திருந்தனர். வாய்ப்பும் வசதியும் பணமும் பக்கபலமும் போதுமான அளவு இருந்திருந்தால் பல்கலைக் கழகம் சென்று இலக்கியத் துறையில் பட்டம் பெற்றிருப்பார். அவரது பெரிய குடும்பத்திலே வீசிய வறுமைப் புயல் தொடர்ந்து படிக்கவிடாது அவரைத் தடுத்து நிறுத்தியது. வாழ்க்கை வண்டியை ஒட்டவேண்டிய வாணிபத் துறையிலே ஈடுபட்ட மாக்ஸ்வினி ஓய்வு நேரங்களின் பெரும் பகுதியை இலக்கியக் கல்விக்காகச் செலவிட்டார். இப்படி தனியாகப் படித்து தேர்வெழுதி பட்டமும் பெற்றார். கவிதை இயற்றுவதில் திறமையுடையாராக விளங்கினார்.

தனது 17-வது வயதில் கேலிக் இலக்கியக் கழகம் என்ற பெயரில் ஒரு நிறுவனத்தைத் துவக்கினார். இலக்கியப் பணிபுரிந்த இவ் இளைஞர் மன்றம் குடியரசு குறிக்கோளையும் கொண்டு விளங்கியது. பழங்கால இலக்கியங்களுக்குப் புதிய மெருகு கொடுத்துப் பொது மக்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டுகின்ற வகையில் பொதுச் சேவை புரிந்தார், கேலிக்மொழியில் ஓர் இலக்கிய இதழ் நடத்தி மொழிச் சேவை புரிந்தார். கழகம் கண்டு, மேடையில்பேசி, பத்திரிகை நடத்தி இலக்கியப் பணி புரிந்த மாக்ஸ்வினியின் தொண்டு உள்ளம் தொழிலாளர் துறையிலும் தன் கருத்தைச் செலவிட்டது.

அயர்லாந்து தொழில் வளர்ச்சி மன்றம் ஒன்று அவரது பேருழைப்பால் துவக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார நிலையின் மேம்பாட்டுக்கும், தொழிலாளர்களின் ஒற்றுமைக்கும் அது ஆற்றிய சேவை அளவிடற்கரியது. இம் மன்றத்தினர் அணி அணியாக, கூட்டம் கூட்டமாக பட்டி தொட்டிகளிலும், குக்கிராமங்களிலும் சென்று வெளிநாட்டு சாமான்களை வெறுத்தொதுக்கவேண்டியும் உள்நாட்டுப் பொருட்களை வாங்கி தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் தருமாறும் பிரச்சாரம் செய்தனர். இதன் மூலம் மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் மக்கள் மத்தியில் பரந்து வளர்ந்தன. கேலிக் மொழியும் பொது மக்களால் பேணப்பட்டு வளர்க்கப்படும் பெருமை பெற்றது.

1915-ம் ஆண்டு கிறித்துவ விழாவின்போது மாக்ஸ்வினி குடியரசுத் தானையின் தளபதியானார். நாட்டிலே அயர்லாந்து சுதந்திர தாகம் கொழுந்துவிட்டெரிந்தது. அதன் விளைவு 1916-ம் ஆண்டு மாக்ஸ்வினி இருமுறை அரசினர் விருந்தாளியாகச் சிறைச்சாலையில் தங்க நேர்ந்தது. விடுதலை உணர்ச்சி பெற்ற வீரர்கள் ஆயிரவர் ஆயிரவராகச் சிறைச்சாலை நண்ணினர்.

அரசாங்கத்தின் அடக்குமுறையையும் ஆணவத் தன்மையையும் எதிர்த்து சிறையில் மாக்ஸ்வினி முதன் முறையாக உண்ணுநோன்பு மேற்கொண்டார். அவரைத் தொடர்ந்து வேறு சிலரும் உண்ணுநோன்பு இருந்தனர். ஆனால் கிறித்துவ விழாவை ஒட்டி சிறைக் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அளித்தபோது மாக்ஸ்வினியும் விடுதலை பெற்றார். புதிய காதலனும் காதலியும தங்கள் வாணாளிலேயே சேர்ந்து கொண்டாடிய ஒரே கிறித்துவப் பெருவிழா அதுதான். சுற்றமும் மனைவியும் புடைசூழ இப்பெருநாள் கொண்டாடிய சில நாட்களுக்கெல்லாம் சிறைச்சாலை மீண்டும் அச்செயல் வீரரை அழைத்தது. டப்ளின் நகரில், பிரஞ்சு பாஸ்டில் சிறையோடு ஒப்பிட்டு நோக்கத்தக்க அளவு படுமோசமான ப்ரைட்வெல் சிறையில் அவர் தள்ளப்பட்டார்.

உரிமைக் குரல் எழுப்பிய அவ்வுத்தமர் சிறைச்சாலையினுள்ளே வாடிக்கொண்டிருக்கும் பொழுது 1918-ம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ம் நாள் ஒரு குழந்தைக்குத் தந்தையானார். குடியரசுத் தானைக்குரிய தனிப்பட்ட ஆடைகளை அணிந்திருந்த குற்றத்திற்காகவே அவர் பல முறை சிறைப்படுத்தப்பட்டார். "வெல்ல மொழியாள் காதல் மழலையங்கேவீட்டினுள்ளே தொட்டிலிலே தவழக் காணும் வாய்ப்பு ஒன்பது மாதங்களுக்குப் பிறகுதான் உரிமைக்குப் போராடும் அவ்வீரனுக்குக் கிடைத்தது.

மாக்ஸ்வினி விடுதலை பெற்று வெளிவந்ததும் மனைவி குழந்தையோடு பார்த்தோர் மயங்கும் பாலிங்கியரி சென்றார். சிலநாள் அங்கே தங்கிய பிறகு அவரும் குடும்பமும் கார்க்நகர் வந்து சேர்ந்தது. அமைதியாக குடும்பத்தோடு தங்க முடியாமல் அவர் அலைந்துகொண்டேயிருந்தார்.

திடீரென்று ஒருநாள் கார்க் நகரத் தந்தை திரு. மெக்கார்ட்டன் பயங்கர இயக்கத்தினரால் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி நாட்டிலே பறந்தது. நாடெங்கும் அச்சமும் பீதியும் தாண்டவமாடின. பின்னர் அயர்லாந்து போலீசாரே அவரை சுட்டுக் கொன்றதாகத் தெரிய வந்தது.

பயங்கரமான இச்சூழ்நிலையில் மேயர் பதவிக்கு மாக்ஸ்வினி போட்டியிட்டார். பொதுமக்களின் ஒன்றிய ஆதரவு அவரை நகரத் தந்தையாக்கிற்று. மரண தண்டனையையும், தூக்குமேடையையும் எதிர்பார்த்தே மாக்ஸ்வினி இந்த பெரிய பொறுப்பை ஏற்றார். நாட்டிற்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்த போற்றுதற்குரிய அப்பெருமகனை ஒழித்துக் கட்ட போலீசார் தீவிரமாக முயன்றனர். உயிரைத் துரும்பென மதித்து அவர்களோடு இடைவிடாமல் போராடிக் கொண்டிருந்தார். 1920-ம் ஆண்டு ஆகஸ்ட் 12-ம் நாள் அதிகாரவர்க்கம் அவரைச் சிறை செய்தது.

இராணுவ நீதிமன்றத்தில் அவர் ஆற்றியபேருரை கிழவனைக் குமரனுக்கும், பூனைக்கும் புலிவெறியூட்டும். மாக்ஸ்வினியின் வாக்கு மூலம் கூடியிருந்தோரை மயிர்க்கூச்செறிய வைத்தது. "அயர்லாந்துக்காக தியாகம் செய்யும் பொழுது கண்ணீர் சிந்தலாகாது. அப் புனிதப்பணியில் பெருமையும், பெருமகிழ்வும் நாம் கொள்ள வேண்டும்" என்று அவர் நியாய மன்றத்தில் நின்றுகொண்டே பொது மக்களுக்கு அறிக்கைவிட்டார்.

நீதி விசாரணைக்குழுவின் தலைவர் அவரது மனைவியிடம் "தனது பணிகளைக் குறித்து உங்கள் கணவர் உங்களிடம் ஏதாவது கூறியதுண்டா?" என்று கேட்டபோது, "அயர்லாந்து விடுதலைப் போராட்டத்தில் பொது மக்களின் நம்பிக்கையையும் உறுதியையும் தனது தொண்டு பெருமளவுமிகைப்படுத்தும் என்று அவர் நம்பினார். அயர்லாந்து குடியரசே அவர் வாழ்வின் குறிக்கோள். தாய் நாட்டைப்போல வேறெதுவும் அவர் கருத்தைக்கவர்ந்ததில்லை" என்று திருமதி மாக்ஸ்வினி பதிலிறுத்தார்.

ஆங்கிலேயப் பேரரசுக்கு அடங்கிக்கிடந்த அயர்லாந்து அடிமைத் தளையறுத்து தனிநாடாகி குடியாட்சி நடத்துகிறது. மாக்ஸ்வினியின் தியாகம் 1922-ல் வெற்றி பெற்றது. அவரது கனவு நனவாகியது.

★


# பொங்கல் மலர்

## விற்பனையாளர்களுக்கு

இந்த ஆண்டுப் பொங்கல் மலர் வழக்கம்போல் 14—1—58-ல் வெளிவருகிறது.

**விலை:- எட்டணா**

ஏஜண்டுத் தோழர்கள் மலர் ஒன்றுக்கு 12 புதிய காசு கழிவு போக மீதி 38 காசு வீதம் கணக்கிட்டு முழுத் தொகையையும் அனுப்பி வைப்பதுடன், டிசம்பர் பட்டியல் பாக்கி முழுவதையும் 10—1—58-க்குள் அனுப்ப வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பொறுப்பாளர்.**

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண் { அலுவலகம் 15 இல்லம் ...11

# இலட்சியபுரி நோக்கி!

[மு. இளமாறன், பி.ஏ.,]

அவன் நடந்துகொண்டிருந்தான்.

அவனுக்குப்பின்னுலிருந்து பல குரல்கள் எழுந்தன.

"மகனே, பெற்ற வயிறு எரிகிறதடா. எல்லோரும் சுகமாக உட்கார்ந்திருக்க, நீ மாத்திரம் ஏனடா கால்கடுக்க நடந்து செல்கிருய்?"—இது, அவன் தாயின் குரல்.

"மைந்தா, பெற்றோரைக் காப்பாற்றும் பொறுப்பை ஏனடா மறந்தாய்?"—இது அவன் தந்தையின் குரல்.

அவன் தாயும் தந்தையும் எழுப்பிய தாபக் குரல்கள், அவன் நடைக்குத் தயக்கமூட்டவில்லை.

"அன்பரே, என்னைக் கைவிட்டீரோ?"—இது, அவன் மனைவியின் ஓலம்.

"அப்பா, திரும்பி வாங்கப்பா"—இது அவன் குழந்தையின் கூக்குரல்.

பச்சிளங் குழந்தையின் பாசக் குரலை அவன் பாராட்டவே இல்லை.

"நண்பா, நம்மைப் பற்றிய கவலைதானப்பா முக்கியம்; நாட்டைப் பற்றியதெல்லாம் அப்புறம் தான்"—இது நண்பனின் அறிவுரை.

நண்பனின் நேசக்குரலை அவன் நினைவிற் கொள்ளவில்லை.

"தம்பி, வீணே அழிந்து போகாதே!" — இது, 'எதார்த்த வாதி'யின் எச்சரிக்கை.

இந்த அச்சுறுத்தல், அவன் உதட்டில் புன்னகையை வரவழைத்ததே யொழிய, அவன் நடந்துகொண்டே யிருந்தான்.

"அட பயலே, நீ இப்படி ஓய்வு ஒழிச்சலின்றி எவ்வளவு தூரம் தான் போய்விடுவாய்?" — இது ஏமாந்தவன் உதிர்த்த ஏளனப் பேச்சு.

அந்தக் கேலிக்குரல் அவனுக்குக் கேட்டதாகவே தெரியவில்லை.

"நண்பரே, நீர் மிகவும் நல்லவராயிற்றே. கொஞ்சம் நின்றுகொண்டிருங்கள். எங்கள் ஆலோசனை முடிந்ததும் நாங்களும் வருகிறோம். சேர்ந்தே போகலாம்"—இது, நண்பன் எனும் போர்வையில் எத்தனொருவன் எழுப்பிய குரல்.

இந் நயவஞ்சகக் குரலைக்கேட்டு அஞ்சித்தானே, என்னவோ, அவன் நடை துரிதப்பட்டது.

அவன் பீடுநடை போட்டு முன்னேறிப் போய்க்கொண்டே யிருந்தான்.

அன்புக் குரலுக்கு அவன் அசையவில்லை.

பாசக் குரலுக்கு அவன் பணியவில்லை.

காதற் குரலுக்கு அவன் காது கொடுக்கவில்லை.

மழலை மொழிக்கு அவன் மசியவில்லை.

நேசக்குரல் கேட்டு அவன் நிற்கவில்லை.

எச்சரிக்கைக்கு அவன் இணங்கவில்லை.

அவதூறுக்கு அவன் அஞ்சவில்லை,

வஞ்சகத்திற்கு அவன் வளைந்துதரவில்லை.

அவன் போய்க்கொண்டே யிருந்தான்.

ஆனல்......

எங்கிருந்தோ எழுந்தது ஒரு குரல்: "வீராதி வீரனே, நீபோ. நிற்காதே. போய்க்கொண்டேஇரு. நான் இங்கே உன் தாய்நாட்டின் மீது பிறமொழியைத் திணித்து உன் தாய்மொழிக்குக் கல்லறை கட்டிவைக்கிறேன். போ!"

அத்தனை குரல்களும் தராத உணர்ச்சியை — உள்ளக் கிளர்ச்சியை—உத்வேகத்தை — ஓங்கிய சினத்தை அது தந்தது போலும்!

அவன் மார்பு விம்மிற்று; நரம்புகள் புடைத்தன; தோள்கள் உயர்ந்தன; உதடுகள் துடித்தன; விழிகள் சிவந்தன; மூடின. அவ்வளவுதான்!

பற்களை நறநறவென்று கடித்தான்!

திருப்பினன் முகத்தை!

திறந்தான் விழிகளை!

மீசையை முறுக்கி மேலே ஏற்றினன்!

"எவனடா, என் தாய்மொழியை இழித்துரைத்தவன்? எவனடா? எங்கே அவன் தலை? அது, உருள வேண்டிய இடம் — மண்தரை! நான் வாழ, என் மொழி சாகுமோ? வந்து நில்லடா! நின்று சொல்லடா!"

அவன் சொற்களிலே தீப்பொறி பறந்தது.

எரித்த பார்வையும், பதைத்த உள்ளமும், துடித்த நாவும் பெற்ற அவன் முன்னே வந்து நிற்க அந்தக் கோழையால் ஆகுமா? பேடிக் குரலெழுப்பியவன் ஓடி ஒளிந்தான்.

வீரன், மீண்டும் தான்சென்ற திக்கை நோக்கினன். நடக்கத் தொடங்கினன்.

இனி, அவன் நடையைத் தடை செய்ய எந்தப் படையாலும் ஆகவே ஆகாது.

அவன் நடந்துகொண்டே இருக்கிருன், இலட்சியபுரி நோக்கி! இவனல்லவா இலட்சியவாதி!

★

காஞ்சீபுரம் 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.